<u>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை</u>

அனுப்புநர்,
திருமதி.சோ.மதுமதி, இ.ஆ.ப.,
ஆணையாளர்,
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

பெறுநர்,
ஆணையாளர் அலுவலகத்தில் மாநில முகவரி
பட்டியலில் இடம்பெற்றுள்ள தன்னார்வ நுகர்வோர்
அமைப்புகள்(125 அமைப்புகள்)

<u>ந.க.எண்.நுவி3/9534/2018- நாள்: 6.07.2018</u>

அய்யா,

பொருள் : நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு - உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – "தமிழ்நாடு நுகர்வோர் கவசம் " -வெளியிடுதல் - விலைப் புள்ளி கோருவது – தொடர்பாக.

<<>><<>><<>>

தமிழக அரசின் சார்பில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலமாக "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" மாதஇதழ் வெளியிடப்பட்டுவருகிறது. தமிழ்நாடு நுகர்வோர் கவச மாத இதழ்கள் நுகர்வோருக்கு பலன் அளிக்கும் பொருட்டு, மேலும் செம்மைப்படுத்தி நுகர்வோர் களஞ்சியங்களாகப் பிரசுரிக்கும் வகையில் கூடுதல் நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்களுடன் அச்சிடும் பணியினை தகுதியுடைய தமிழ்நாடு நுகர்வோர் அமைப்புகள் வாயிலாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தமிழ்நாடு நுகர்வோர் கவசம் மாத இதழ்கள் அச்சிட இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணையாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் மாநில முகவரி பட்டியலில் இடம்பெற்றுள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளிடமிருந்து விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

விலைப்புள்ளிகள் பெறப்பட வேண்டிய இறுதி நாள் 23.07.2018காலை 11.00 மணி, விலைப்புள்ளி திறக்கப்படும் நாள்: 23.07.2018 மாலை 15.00 மணிக்கு.

விலைப்புள்ளிகள் "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்ற தலைப்பிடப்பட்ட, சீலிட்ட அஞ்சல் உறையில் ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, எழிலகம், 4வது தளம், சேப்பாக்கம், சென்னை-5 என்ற முகவரிக்கு விலைப்புள்ளி வந்து சேரவேண்டிய இறுதி நாளாகிய 23.07.2018 தேதியன்று காலை 11.00 க்குள் பெறப்பட வேண்டும். உறையின் மீது தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் முழு முகவரி மற்றும் தொடர்பு தொலைபேசி எண்/ செல்லிடபேசி எண் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு உரிய முகவரியின்றி பெறப்படும் விலைப்புள்ளிகளோ, குறிப்பிட்ட காலத்திற்குள் பெறப்படாத விலைப்புள்ளிகளோ, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

விலைப்புள்ளிகள் வழங்குவதற்கான தகுதிகள், பணிவிபரம், கூடுதல் நிபந்தனைகள், விலைப்புள்ளிகள் வழங்கும் முறை முதலானவையாவும் www.consumer.tn.gov.in என்ற வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விலைப்புள்ளிகளுடன் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள மேல் அட்டைகள் அச்சிடும் தாள்கள் அஞ்சல் முகவரிக்கான Wrapper ஆகியவற்றையும் சமர்ப்பிக்கவேண்டும்.

நுகர்வோருக்கு விழிப்புணர்வு வழங்கும் இச்சிரிய பணியில் தங்களை முழுமையாக சேவை மனப்பான்மையுடன் ஈடுபடுத்திக் கொள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் கோரப்படுகின்றன.

ஒம்/-சோ.மதுமதி
ஆணையாளர்

இணைப்பு 1- பணிவிபரம்-தகுதிகள்.

இணைப்பு 2- கூடுதல் நிபந்தனைகள்.

இணைப்பு 3- விலைப்புள்ளிகள் வழங்கும் முறை.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆணையாளருக்காக. 10/7/18

## இணைப்பு -1

**பணி விவரம்**

நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்கள் அடங்கிய **"தமிழ்நாடு நுகர்வோர் கவசம்"** என்ற பெயர் கொண்ட பதிவு செய்யப்பட்ட மாத இதழினை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நிர்ணயித்துள்ள வடிவில் தயாரித்து, துறையின் அஞ்சலக சந்தாதாரர் பதிவு சான்றினை பயன்படுத்தி மாவட்ட அலுவலகங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் நேரடியாக/ அஞ்சல் வாயிலாக அனுப்பி வைத்தல் மற்றும் மீதம் இருப்பில் வைக்க வேண்டிய பிரதிகளை ஆணையாளர் அலுவலகத்தில் ஒப்படைத்தல் தொடர்பான பணிகளை ஆகஸ்ட் 2018 முதல் ஜீலை 2020 வரையிலான இரண்டாண்டு காலத்திற்கு மேற்கொள்ளுதல்.

**தகுதிகள்:**

1. விலைப்புள்ளிகள் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு நுகர்வோர் அமைப்பினர்களால் மட்டும் அனுப்பப்பட வேண்டும்.

2. அவ்வமைப்பு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் மாநில முகவரி பட்டியலில் இடம் பெற்று இருக்க வேண்டும்.

3. மாத இதழினை அச்சிடவும், மாவட்ட அலுவலகங்களுக்கும் நூலகங்களுக்கும்/ அரசு அலுவலகங்களுக்கும்/ சந்தாதாரர்களுக்கும் கால தாமதமின்றி அனுப்பும் வகையில் போதிய அளவு பணியாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கான சான்று விலைப்புள்ளியுடன் வழங்கப்பட வேண்டும்.

4. விலைப்புள்ளிகள் வழங்கும் தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர் ஐந்து ஆண்டுகளுக்கான வரவு செலவு அறிக்கையினை விலைப்புள்ளியுடன் இணைத்தனுப்ப வேண்டும்.

5. தொடர்புடைய தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர் நுகர்வோர் விழிப்புணர்வு பணியில் குறைந்தபட்சம் 10 முதல் 15 ஆண்டுகள் முன் அனுபவம் உள்ள அமைப்பாகவும், குறைந்தபட்சம் 5 ஆண்டு காலத்திற்கு நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்கள் அடங்கிய புத்தகங்கள் தமிழ்/ ஆங்கிலத்தில் தொடர்ந்து வெளியிட்ட முன் அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

6. " **தமிழ்நாடு நுகர்வோர் கவசம்**" மாத இதழ் வெளியிட தனியாக சொந்தமாக/ வாடகைக்கு அச்சகம் இருத்தல் அவசியம்.

7. விலைப்புள்ளி வழங்கும் தன்னார்வ நுகர்வோர் அமைப்பு மாத இதழினை அழகுற வடிவமைக்கும் விதத்தில் எடிட்டிங், அச்சிடும் பணி மற்றும் வடிவமைப்பு பணி (Layout)

ஆகியவற்றில் உரிய முன் அனுபவம் கொண்ட தகுதியுடைய பணிகளை கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும்.

8. தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர் நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் மருந்துகள் தர கட்டுபாடுகள், எடை அளவீட்டு கருவிகள், நுகர்வோர் குறைதீர் மையங்களின் செயல்பாடு உள்ளிட்ட நுகர்வோர் அறிய வேண்டிய அனைத்து விவரங்களையும் தேசிய மற்றும் அயல்நாட்டு நிகழ்வுகளிலிருந்து தொகுத்து நுகர்வோர் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் அச்சிடும் வடிவில் துறையின் ஒப்புதல் பெறும் வகையில் பணியாற்றும் அனுபவம் கொண்ட அமைப்பாக விளங்க வேண்டும்.

9. ஆன்லைனில் புத்தகம் வெளியிடும் முறையில் போதிய முன் அனுபவம் உள்ள அமைப்பாக இருத்தல் வேண்டும்.

10. நுகர்வோர் அமைப்பினர் "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" மாத இதழ் நுகர்வோரின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் தொடர்ந்து அழகிய வடிவில் வரும் வகையில் நவீன வசதிகள் அடங்கிய அச்சிடும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டவராக இருப்பது அவசியமாகும்.

11. தமிழ்நாடு நுகர்வோர் கவசம் மாத இதழ் அச்சிடும் பணிக்கென போதிய தனி இடவசதி கொண்ட அலுவலகம் மற்றும் போதிய தகுதியுடைய தொழில்நுட்ப பணியாளர்கள், குறிப்பாக பதிப்பு, விளம்பரங்கள் பெறுதல் மற்றும் மாத இதழ் விநியோகித்தல் ஆகிய பணிகளில் முன் அனுபவம் கொண்ட பணியாளர்கள் இருத்தல் அவசியமாகும். இதற்கான சான்று தவறாது விலைப்புள்ளியுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

12. இப்பணிக்கான டேவணித் தொகையாக ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வங்கி வரைவோலையாக TAMILNADU NUGARVOR KAVASAM என்ற பெயரில் செலுத்தப்பட வேண்டும்.

<u>இணைப்பு 2</u>

<u>கூடுதல் நிபந்தனைகள்.</u>

<u>அ.மாத இதழில் வெளியிடப்படும் செய்திகளுக்கான நிபந்தனைகள்.</u>

1. நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த தகவல்கள், உணவு பாதுகாப்பு, நேர்மையற்ற வணிகம், நுகர்வோர் முக்கியமாக கவனிக்க வேண்டிய அம்சங்கள், மாவட்ட/மாநில குறைதீர் மன்றங்கள் தீர்ப்பாணைகள், குடிமக்கள் நுகர்வோர் மன்றத்தின் செயல்பாடுகள் எந்தளவிற்கு சமூகத்திற்கு பயனுள்ளதாக உள்ளது என்பது போன்ற விவரங்களாக இருத்தல் வேண்டும்.

2. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் சுயபிரதாபங்கள், அவ்வமைப்பின் செயல்பாடுகள் முதலானவை பொதுமக்கள்/ நுகர்வோருக்கு பயனில்லை என்பதால் இவ்வம்சங்கள் இல்லாதிருத்தல் வேண்டும்.

3. மாநில/மத்திய அரசின் செயல்பாடுகளை விமர்சித்தோ, அரசுக்கு எதிரான அம்சங்கள் கொண்டதாகவோ இருத்தல் கூடாது.

4. பிரதி மாதமும் 36 பக்கங்கள் கொண்ட விவரங்கள் பிரதி மாதம் 1ம் தேதி நுகர்வோர் விழிப்புணர்வு பிரிவில் பெறப்பட வேண்டும்.

5. பிரதி மாதமும் இதழில் பிரசுரிக்கப்படும் விவரங்கள் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளரின் முடிவுக்குட்பட்டதாகும். ஆணையாளர் மறுப்பு தெரிவிக்கும் பக்கங்கள் / கருத்துகளுக்கு உடனடியாக மாற்று பக்கங்கள்/ விவரங்கள் பெறப்பட வேண்டும்.

6. ஆணையாளர் அங்கீகரிக்கும் விவரங்கள் மட்டுமே அச்சிட வேண்டும்.

<u>ஆ. அச்சிடுவதற்கான நிபந்தனைகள்.</u>

1. மாத இதழ் 170gsm Foreign Art Paper ல் 4 பக்கங்கள் மேல் அட்டை (Wrapper) மற்றும் 4 பக்கங்கள் நடுபக்கம்(Center) கொண்டதாக இருக்க வேண்டும்.

2. இதர 28 பக்கங்கள் Maplotho 60gsm ல் தனி வண்ணத்தில் (Single colour) இருக்க வேண்டும்.

3. முதல் வருடத்தில் பிரதி மாதம் 10,000 பிரதிகள் அச்சிடப்பட வேண்டும். சந்தாதாரர்கள் அதிகமானால் கூடுதல் பிரதிகள் அச்சிட பணியாணை வழங்கப்படும்.

4. தொழில்ரீதியான மாத இதழ் போன்றே நன்முறையில் லேஅவுட் டிசைன் மற்றும் ஸ்கேனிங் கொண்டதாக இருத்தல் வேண்டும். லேஅவுட் டிசைன் உணவுப்பொருள் வழங்கல்மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் விருப்பம்/திருப்திக்குட்பட்டிருக்க வேண்டும்.

5. இந்திய பத்திரிக்கை மன்றத்தின் விதிமுறைகளுக்குட்பட்டும் Press and Registration of Books Act and Registration Newspaper (Central) Rules – விதிமுறைகளுக்குட்பட்டும் செயல்படவேண்டும்.

6. உணவுப்பொருள் வழங்கல்மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை ஆணையாளரால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் இதர நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

7. இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் மீறப்படும் நிலையில் ஒரு மாத கால அறிவிப்பிற்கு பின்பு பணி ஆணை ரத்து செய்ய ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

<u>இ. மாத இதழ்களை அரசு அலுவலகங்கள் /நூலகங்கள்/சந்தாதாரர்களுக்கு அனுப்புதற்கான நிபந்தனைகள்</u>:

1.பிரதிமாதம் 18ம் தேதியன்று இறுதி வடிவ மாத இதழ் அச்சிட்டு பெறப்பட வேண்டும்.

2. பிரதிமாதம் 21-22ம் தேதிக்குள் அஞ்சலக துறையிடமிருந்து பெறப்பட்ட அஞ்சலக சலுகையின் பேரில் எழும்பூர், RMS அஞ்சலகத்திலிருந்து அனுப்பப்பட வேண்டும். சந்தாதாரர்கள் பட்டியல் ஆணையாளர் அலுவலகத்திலிருந்து பிரதிமாதம் அளிக்கப்படும். இப்பட்டியலின்படி அனைத்து அலுவலகங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் விடுதலின்றியும்/கால தாமதமின்றியும் அனுப்பப்பட வேண்டும்.

3. ஒவ்வொரு தனி இதழும் 4" × 10" அளவு கொண்ட 90 GSM Wrapper Band மூலம் அனுப்பப்பட வேண்டும்.

4. ஆணையாளர் அலுவலகத்திலிருந்து மாதந்தோறும் திருத்தப்பட்ட முகவரி பட்டியல் அளிக்கப்படும். அதற்கேற்றவாறு அஞ்சல் செய்யப்பட வேண்டும்.

5. மீதமுள்ள பிரதிகளை ஆணையாளர் அலுவலகத்தில் நுகர்வோர் விழிப்புணர்வு பிரிவில் ஒப்படைக்க வேண்டும்.

<u>ஈ. அச்சிட்டு வழங்க கட்டணம் விடுப்பு செய்யும் முறை</u>

துறையின் பதிவு பெற்ற மாத இதழான "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" எழும்பூர் ஆர்.எம்.எஸ். அஞ்சல் அலுவலகத்திலிருந்து சந்தாதாரர்களுக்கும்/மாவட்ட அலுவலகங்களுக்கும்/மாவட்ட நூலகங்களுக்கும் பிரதி மாதம் 21-22 தேதிகளில் அனுப்பி வைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அனுப்பியதற்கான சான்று பிரதி மாதம் கோரிக்கையாக அனுப்பப்படின், தொடரும் மாதத்தின் மாதாந்திர கோரிக்கை தொகை தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கத்தின் (TANSSCOPE) வாயிலாக ஒப்பளித்து வழங்கப்படும். கோரிக்கை வழங்கும் முன்பாக மீதி பிரதிகள் மற்றும் மென்வடிவில் மின்புத்தகம் (electronic magazine) pdf format ல் 2MB அளவு கொண்ட கோப்பாக குறுந்தகட்டில் வழங்க வேண்டும்.

<u>இணைப்பு -3</u>

விலைப்புள்ளிகள் சமர்பிக்கும் முறை:

நுகர்வோர் அமைப்புகள் வழங்கும் விலைப்புள்ளிக்ள உறை 'அ' மற்றும் உறை 'ஆ' என இரு உறைகளில் வழங்கப்பட வேண்டும்.

<u>உறை 'அ' வில் விலைப்புள்ளி அனுப்புவதற்கு நுகர்வோர் அமைப்பு போதிய தகுதி கொண்டுள்ளதனை உறுதி செய்யும் வகையில் சான்றொப்பமிட்ட கீழ்காணும் ஆவணங்களின் நகல்கள் வைக்கப்பட வேண்டும். அரக்கு முத்திரையிடப்பட்ட உறைத் தலைப்பில் 'தமிழ்நாடு நுகர்வோர் தவசம்' மாத வெளியீடு தயாரிப்பு பணிக்கான தொழில்நுட்ப விலைப்புள்ளிகள் என குறிப்பிட வேண்டும் மேலும் அனுப்புநர் விவரம் குறிக்கப்பட வேண்டும்.</u>

(அ) நுகர்வோர் அமைப்பு சட்டப்படி பதிவு செய்யப்பட்டு அப்பதிவு நாளது தேதி முடிய புதுப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதனை உறுதி செய்யும் பதிவுச் சான்று தொடர்பான ஆவணங்கள் (Under Registration of Societies Act or Registration of Trusts Act, etc.,)

(ஆ) நுகர்வோர் அமைப்பினர் கடந்த ஐந்தாண்டு காலமாக மேற்கொண்ட வரவு /செலவு விவர பட்டயக் கணக்காயர் சான்றொப்பமிட்ட வரவு செலவு அறிக்கை (01.04.2011 முதல் 31.03.2016 முடிய)

(இ) நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்கள் அடங்கிய புத்தகம் உள்ளிட்ட பதிப்புகள் கடந்த ஐந்தாண்டுகளில் வெளியீடு செய்த விவர அறிக்கை மற்றும் அச்சிட்ட பிரதிகள் எண்ணிக்கை விவரம் - அசல் புத்தகங்கள் / வெளியீடுகள் கோரப்படும்போது தவறாது பார்வைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

(ஈ) தமிழ்நாடு நுகர்வோர் கவசம் மாத இதழ் வெளியிட போதிய அளவு பணியாளர்கள்/தன்னார்வ ஆர்வலர்கள் தேவைப்படும் நிலையில் நுகர்வோர் அமைப்பின் வசம் உள்ள பணியாளர் மனித சக்தி குறித்த விவரம் அடங்கிய அறிக்கை: பணியாளர் / தன்னார்வ ஆர்வலர் பெயர், பதவி மற்றும் பத்திரிக்கைத் துறை அனுபவம் குறித்த விவரம் நுகர்வோர் அமைப்பினரால் வழங்கப்பட வேண்டும்.

(உ) மாத இதழ் வடிவமைப்பு பணி, தமிழ் கணினி பதிவு பணி, எடிட்டிங், அச்சிடுதல், விளம்பரங்கள் பெறுதல், மாத இதழினை அஞ்சலக சலுகை கட்டணத்தில் அனுப்புதல் மற்றும் தொடர்புடைய பணிகளில் நுகர்வோர் அமைப்பிற்கு போதிய முன் அனுபவம் தொடர்பான விரிவான அறிக்கை மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் கவசம் மாத இதழ் தொய்வின்றி நற்பொலிவுடன் வெளிவர நுகர்வோர் அமைப்புடன் இணைந்து செயல்படக்கூடிய நவீன வசதிகளுடன் கூடிய அச்சகம் மற்றும் பதிப்பு நிறுவனம் குறித்த விவரம் (Technical partner publishers)

(ஊ) டேவணித் தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) க்கான வங்கி வரைவோலை.

உறை 'ஆ' வில் விலைப்புள்ளிகள் பின்வரும் படிவத்தில் வழங்கப்பட வேண்டும்:- அரக்கு முத்திரையிடப்பட்ட உறைத் தலைப்பில் 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' மாத வெளியீடு தயாரிப்பு பணிக்கான நிதி ஆதாரத்திற்கான விலைப்புள்ளிகள் என குறிப்பிட வேண்டும் மேலும் அனுப்புநர் விவரம் குறிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வாயிலாக நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்கள் அடங்கிய பதிவு செய்யப்பட்ட மாத இதழ் 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' என்ற மாத இதழினை இரண்டாண்டு காலத்திற்கு மேற்கண்ட அரசுத் துறை சார்பில் அச்சிட -------------------- --------------- ------------------- நுகர்வோர் அமைப்பினர் வழங்கும் விலைப்புள்ளிகள்:

| | |
|---|---|
| ஒரு மாதத்தில் ஒரு பிரதிக்கான தொகை (குறைந்த பட்சம் 10,000 பிரதிகள் அச்சிட) | ரூ. (எழுத்தால்-----------------------------------) |

(1) ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கடித எண் நுவி3/9534/2018 நாள்: 6.07.2018 ன்படி 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' என்ற பெயரில் நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்கள் அடங்கிய மாத இதழினை வெளியிட விலைப்புள்ளிகள் கோரியதில் வழங்கப்பட்ட விதிகள் அறிந்தோம். அவ்விதிகளுக்கு உட்பட்டே மேற்கண்ட விலைப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன என உறுதி செய்கிறோம்.

(2) மேலே குறிப்பிட்ட தொகை வரிகள் உள்ளிட்ட அனைத்து தொகைகளும் உள்ளடக்கியதாகும். எதிர் காலத்தில் ஒப்பந்த காலம் முடிவடையும் வரை மேலே குறிப்பிட்ட தொகையினை தவிர்த்து கூடுதல் தொகை எதுவும் எந்த வகையிலும் கோரப்படாது என உறுதி செய்கிறோம். இவ்வினம் தொடர்பாக அரசுக்கு மற்றும் பத்திரிக்கை தொடர்புடைய அஞ்சல் துறை உள்ளிட்ட மத்திய அரசு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகைகள் எமது நுகர்வோர் அமைப்பு வாயிலாகவே செலுத்தப்படும் என உறுதி செய்கிறோம்.

நுகர்வோர் அமைப்பின் தலைவர் / செயலாளர்

உறை 'இ' யில் மேற்குறிப்பிட்ட இரு உறைகள் அதாவது உறை "அ" மற்றும் உறை "ஆ" ஆகியவற்றை வைத்து உறை "இ" யையும் அரசுக்கு முத்திரையிட்ட சீலிட்டு 23.07.2018 முற்பகல் 11.00 மணிக்கு முன்பாக ஆணையாளர். உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 என்ற முகவரியில் சேரும் வண்ணம் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும். உறை "இ" மீது 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' மாத வெளியீடு தாயரிப்பு பணிக்கான விலைப்புள்ளிகள் என குறிப்பிட வேண்டும் மேலும் அனுப்புநர் விவரம் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுடன் குறிக்கப்பட வேண்டும்.

ஒம்/-சோ.மதுமதி
ஆணையாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/07/18

ஆணையாளருக்காக

2/2

10/07/18